# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 167/2017/மா**

**ஆணை நாள்: 28–02–2020**

திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
திருச்சி.

– முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
உதவி வருவாய் அலுவலர்,
மற்றும் அலுவலர்கள்,
கோ. அபிஷேகபுரம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

– எதிர் மனுதாரர்கள்

திருச்சிராப்பள்ளி, புத்தூர், ஆபீசர்ஸ் காலனி, எண்.3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரது 04.08.2017 நாளிட்ட முறையீட்டு மனு 07.08.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.167/மா/2017 என எண்ணிடப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

முறையீட்டு மனுதாரர் தனது 04.08.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில், திருமதி. ஜெயா என்பவரது வீட்டிற்கு உரிய ஆவணம் ஏதுமின்றியும், உரிய கட்டணம் பெறாமலும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், நடைமுறை விதிகளுக்கு முரணாக திருமதி. சத்தியபாமா என்பவர் பெயரில் சொத்துவரி மாற்றம் செய்யப்பட்டது கண்டறியப்பட்டு, அதனை ரத்து செய்து, தற்போது சொத்துவரி திருமதி. புனிதா ராகினி லூதர் என்பவர் பெயரில் உள்ளது என்றும், இந்த

முறைகேடுகளுக்கு காரணமான அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் 15.7.2019 நாளிட்ட அறிக்கையில் மேற்படி சொத்துவரி பெயர் மாற்றமானது முதலில் கணினியில் தவறுதலாக எவ்விதமான ஆவணங்களும், கோப்புகளும் இல்லாமல் புனிதா ராகினி லூதர் என்பவர் பெயரிலிருந்து திருமதி பாமா என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், இத்தவறு கண்டறியப்பட்டு திருமதி பாமா என்பவர் பெயரிலிருந்து உடனே மீளவும் சொத்தின் முந்தைய உரிமையாளரான புனிதா ராகினி லூதர் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், இதன் பின்னர் சொத்துவரி விதிப்பானது, திருமதி. சத்தியபாமா என்பவரால் சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பம், அதற்கான சொத்துவரி பெயர் மாற்ற கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்ததின் பேரில் கோப்பு எண் அ310062/2015-ன்படி முறையாக திருமதி. புனிதா ராகினி லூதர் என்பவர் பெயரிலிருந்து திருமதி. பாமா என்பவர் பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும், திருமதி. ஜெயா என்பவர் சொத்துவரி பெயர் மாற்றம் கோரி யாதொரு விண்ணப்பமும் விண்ணப்பிக்காத நிலையில் அது தொடர்பான கோப்புகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை என்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ. அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இது தொடர்பாக திருச்சி மாநகராட்சி ஆணையர் தனது 15.5.2019 நாளிட்ட அறிக்கையில் மேற்படி வரிவிதிப்புகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு விளக்கங்கள் பெறப்பட்டது என்றும், இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துவரி பெயர் மாற்றம் கணினி பதிவு மேற்கொள்ளும் கணினி பதிவு பணியாளரால் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது என்றும், மேற்படி பணியாளர் டிசம்பர் 2015-ல் விபத்தில் இறந்து விட்டார் என்றும், அன்னாரை விசாரிக்க இயலாத நிலையில், குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்கள்/பணியாளர்களின் விளக்கத்தினையே ஏற்க வேண்டிய சூழ்நிலையில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள்/பணியாளர்கள் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 28.11.2019 மற்றும் 03.02.2020 தேதிகளில் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்க ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இந்நேர்வில், மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டு இம்மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாமென முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

(1) திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
எண்.3, ஆபீசர்ஸ் காலனி,
புத்தூர், திருச்சி 17.

(2) ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

(3) உதவி ஆணையர்,
கோ அபிஷேகபுரம் கோட்டம், திருச்சிராப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி